போர்வாள்

...திராவிடர்...

வாள்	திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆடி 2	வீச்சு
1	17-7-48 சனிக்கிழமை	47

ஆசிரியர்கள்:





காங்கிரஸ் சர்க்கார் ஜில்லா போர்டு தேர்தல்களை மறுபடியும் ஒத்திப் போட்டு விட்டது!

இந்தி—ஒழிக!

[புலவர் சுத்தானந்த பாரதியார் 1937 துவக்கத்தில் இந்தியை எதிர்த்தார். ஆனால் 1937 இறுதியில் அதை மும்முரமாக ஆதரிக்கத் தொடங்கிவிட்டார். காரணம், இந்தி எதிர்ப்பு என்பது ஆரிய எதிர்ப்பு என்பதை அவர் திடீரென உணர்ந்துகொண்டதே. அப்படி உணராத வேளையில், ஆரிய சுத்தானந்தர் சுதந்தர சுத்தானந்தமாக இருந்த வேளையில் எழுதிய கட்டுரை இது.]

"தமிழுக்கு வேண்டிய அருட் செல்வம் உள்ளது. தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருப்புகழ், திருக்குறள், பெரிய புராணம் போன்ற அருள்வாக்குகள் மனிதவாழ்விற்குக் கடவுளொளி காட்டுவன. அவை தமிழருக்குப் போதும். அருங்கலைச் செல்வத்திற்கு மேனாட்டைத்தான் எதிர்பார்க்கும் நிலைமையில் இந்தியா உள்ளது. தாய்நாட்டின் அருட் செல்வமும் மேனாட்டின் பொருட் செல்வமும் சேர்க்கே இனி நம்மை ஆளாக்கவேண்டும். இந்த இரண்டிற்கும் இந்தி எவ்வாறு பயன்படும் என்பதை அறிஞர் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்தியினின்று தமிழர் கற்றுப் பயனடையக் கூடியது ஒன்று உண்டு. அதாவது அம்மொழி எவ்வளவு ஆர்வமுடனும் ஆதரவுடனும் முன்னேறி வருகிறதோ அவ்வளவு ஆர்வமுடனும் ஆதரவுடனும் தமிழை முன்னேற்ற ஒவ்வொரு தமிழனும் விரதம் பூண்டு முயற்சி செய்வது! சோதக்பூர் சீதா அச்சுக்கூடம் செய்யும் வேலையைத் தமிழர் செய்தால், இந்தியாவிற்குத் தமிழையே தாய் மொழியாக்கலாம் என்பது கனவாகாது; உறுதியாக நடக்கும். தமிழுக்கு இயல்பாக அவ்வளவு பெருமையுள்ளது. அப்பெருமை தென்குமரிக்கும் வடவேங்கடத்திற்கும் இடையே சிறைப்பட்டுள்ளது. இனித்தான் விரிந்து உலகளாவவேண்டும். ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக 30 எழுத்துக்களில் மற்ற முடிந்த ஓர் அரிய பெரிய தொன்மொழி தமிழே. அஃது இப்போது கால வெள்ளத்தில் வடக்கு, மேற்கிலிருந்து மோதும் அலைகளால் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தமிழனின் கையும் தமிழ் முன்னேற்றத்திற்குக் கை தந்து, இப்பெரிய அரிய அருள்மொழியை அதற்குரிய அரியணையில் ஏற்றி இலங்கவைக்க வேண்டிய காலம் இது. இன்னும் ஐந்தாண்டுகளில் வீடுதோறும் தமிழ் மணம் கமழும்படி செய்ய வேண்டும். மேனாட்டிற்குப் பெருமை தரும் கலைகளெல்லாம் நம் தமிழர் நன்கு பயின்று அறிந்து பயன்பெறும்படி செய்ய வேண்டும். இன்றேல், மேற்சொன்ன அலைகள் மீண்டும் விழுங்கும்! தமிழா! விழித்தெழுக!

இந்தியைவிட ஆங்கிலமே நமக்கு இப்போது இன்றியமையாதது. ஆங்கிலத்தினால் தான் ஜப்பான் முன்னேறிப் பொருட் செல்வம் பொலிந்து விளங்குகிறது. வெறும் மொழிப் பயிற்சிகளிலேயே ஆயுள் வீணாகக்கூடாது. ஒவ்வொருவனும் தனது தாய் மொழியை நன்கு கற்கவேண்டும். உலகுடன் பழகுவதற்கும் தொழில் நடத்துவதற்கும் பெரும்பான்மையோர் உலகெங்கும் நன்கு அறிந்த ஒரு மொழியையும் கற்றறியவேண்டும். அத்தகைய மொழி இப்போது ஆங்கிலமே என்பது யாவரும் ஒப்புக் கொள்ளத் தக்கதே. மக்களுக்கு வேண்டுவன இரண்டு: அருள், பொருள். அருட்செல்வம் தமிழில் மலிந்து கிடக்கிறது; உலகிற்கெல்லாம் வழங்கலாம், பொருட்செல்வத்திற்கு ஆங்கிலத்தின் அறிவுந் துணையும் வேண்டும். ஆங்கிலத்தில் நமக்கெய்தும் பயனைத் தமிழுக்கே உரிமையாக்க வேண்டும். அத்தகைய முயற்சியால்தான் நாம் தலை நிமிரமுடியும்.

தமிழ் இப்போதிருக்கும் நிலைமையில் நமக்கு வேறு மொழிகளில் ஈடுபட நேரமில்லை. பிற மொழிகளை நாம் வெறுக்கவில்லை. அதததனிடத்தில் அதது உயர்வே. அவரவர்க்கு அவரவர்தாய்மொழி உயிர். தமிழின் உயிரைக் காப்பாற்றும் பணி நமக்கு இப்போது வந்து-
ளது பிற மொழிகளின் முன்னே-
றத்திற்குத் தக்கவாறு தமிழ் மு-
ன்னேறியாக வேண்டும். அத-
மாறாக, நம் பள்ளிச்சிறார்,
மையைப் புறக்கணித்து வே-
மொழிக்கு முதன்மை தரும்
யான எத்தகைய முயற்சி
தமிழுக்கு ஆக்கந் தராது. த
இந்தி, ஆரியம், ஆங்கில
தெலுங்கு முதலியன அத்தனை
கற்றால் நல்லதுதான். இன்-
பல மொழிகளை கற்கலாம். ஆ
நேரம்? நமக்கு வேண்டுவது எ
மொழிப் பயிற்சியின் நோ
மென்ன? மனிதர் ஒருவரோடொரு
கலந்து உறவாடிப் பயன் பெ
வதே அதற்கு முதன்மையா
தாய்மொழி வேண்டும். அது ந
தாயகத்திற்கு ஒருமைப்ப
டுணர்ச்சியைத் தரும். இரண்
வது, உலகறிந்த ஒரு மொ
வேண்டும். தற்போது அத்தகை
மொழி ஆங்கிலம் பிரஞ்சு இர
டும் எந்த நாட்டிற்குப் போன
இந்த இருமொழிகளுக்கும் செ
வாக்கு உண்டு. இந்த இரண்
டிலும் மேம்பட்டது ஆங்கில
அதனால்தான் ராஜா ராம்
தன் ராய் போன்ற பெரி
பலர் நம் நாட்டிற்கு ஆங்கிலக்
முதன்மையை வற்புறுத்தி
இன்று உலகிலுள்ள இலக்கி
செல்வமெல்லாம் கலையறி
லாம்.

தமிழ் உலகறிய விளங்க வே
டுமாயின் ஆங்கிலத்துணை வே
டும். மொத்தமாக எந்த இ
மொழிக்கும் தற்போது ஆங்
தின் துணை வேண்டும். வங்கமெ
ஆங்கிலத்தின் கூட்டுறவால் மி
முன்னேறியுள்ளது. தமிழின்
செல்வத்தை ஆங்கிலத்தில்
உலகெங்கும் பரப்பவேண்டும்.
கிலத்திலுள்ள பொருட் செல்வத்
தமிழாக்கவேண்டும். இந்த இ
தான் தமிழருக்குப் பெருமை
இந்தப் பணி நிறைவேறிய பி
தமிழர் எத்தனை மொழி
வேண்டுமானாலும் கற்கட்டும்.

"இந்தியை நாம் வெறுக்கவி
கற்பவர் கற்கட்டும். கட்
படிக்கவேண்டாம். மாணவ
தமிழறிவு பாழ்படும்படியான பே
மொழிகளை முதன்மையாக்க
டாம்.

—

இந்தி—மெஜாரிடி மொழி அல்ல!

[கோவை ஆர். சிதம்பரம்]

தமிழர்களே! வடநாட்டில் எல்லாரும் ஹிந்தி மொழியைப் பேசுகிறார்கள் என்பதுமெய்யா? யார் எதைச் சொன்னாலும் தட்டிப்பேசாமல் தமிழர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற எண்ணமல்லவா, தமிழ் விரோதிகளை அப்படிச் சொல்லும்படி செய்கிறது!

வடஇந்தியாவில் எத்தனை மொழிகள் தற்காலம் வழங்குகின்றன என்று பாருங்கள்:—

(1) வங்காளி
(2) சிந்தி
(3) லந்தி
(4) பஞ்சாபி
(5) குஜராத்தி
(6) இராஜபுதனி
(7) குமோனி
(8) நேபாலி
(9) காஷ்மீரி
(10) பெஹுச்சி
(11) இந்துஸ்தானி
(12) கடுவாலி
(13) உரியா
(14) மராட்டி
(15) பார்சி
(16) சிணு
(17) கோகிஸ்தானி
(18) சித்ராலி
(19) திராகி
(20) பாணி
(21) தம்லூக்

முதலிய எத்தனையோ மொழிகள். இத்தனை மொழிகளுடன் ஹிந்தியும் அதன் பிரிவுகளும் பேசப்படுகின்றன.

அவையாவன:—



இத்தனை பிரிவுகளும் ஒன்று போல் இல்லை. மற்றொன்று. ஒரு பிரிவு ஹிந்தியைப் பேசுகிறவர்களுக்கு மற்றொரு பிரிவு ஹிந்தியைத் தெரிந்து கொள்ள முடியாது.

இந்த உள் மர்மம் வடநாட்டில் யாத்திரை செய்தவர்களுக்கு எல்லாம் தெரியும்.

பங்காரி:—பஞ்சாபியும் இந்தியும் கலந்து பஞ்சாப்பின் தென்கிழக்கில் பேசப்படும் பாஷை.

பிரஜ்பாஷா:—(Muttra) வடமதுரைப் பக்கம் பேசப்படுவது. இது பஞ்சாப்பில் பேசப்படும் ஹிந்தி மாதிரி அல்ல.

கானோஜ்:—பாஞ்சாலநாட்டில் பேசப்படுவது. இது ஏனைய நாட்டினருக்கு விளங்காது.

பந்தேலி:—பந்தல் கண்டிலும் அதனைச் சுற்றிலும் பேசப்படுவது. இது மற்ற நாட்டினர்க்கு விளங்காது.

உருது:—டில்லியிலும் அதைச் சுற்றியும் பேசப்படுவது. மற்றைய இடங்களில் உள்ளவர்க்கு விளங்காது.

அவதி:—இது அயோத்தியிலும் அதன் பக்கத்திலும் பேசப்படுவது. இது வேறு நாட்டினருக்கு அவஸ்தைதான்.

பகேலி, சத்தீஸ்கரி } ரோஹில் கண்டிலும் அதன் பாகங்களிலும் பேசப்படுவன. வேறு இடங்களில் உள்ளவர்கள் அறிய முடியாது.

மைதிலி:—இது மிதிலா நகரங்களிலும் அதன் பக்கங்களிலும் பேசப்படுவது.

போஜ்புரி:—போஜ்புரிக்குப் பக்கங்களில் பேசப்படுவது.

மகதி:—இது மகத நாட்டில் பேசப்படுவது. ஆகையால் அன்பர்களே! ஹிந்தி-ஹிந்தி என்பதெல்லாம் பிராந்தியே. எந்த ஹிந்தியைப் படிப்பது? எதை விட்டுவிடுவது? வட நாட்டில் பெரிய பாஷைகளில் 21-க்கு மேலும் ஹிந்தி மொழியில் 11-க்கு மேலும் இருக்க வடநாட்டில் எல்லாரும் ஹிந்தி பேசுகிறார்கள் என்று கூறுவது சுத்த பச்சைப் பொய்யல்லவா? இது பெரும்பாலும் வடநாடு செல்லாத தமிழர்களை ஏமாற்றுவதல்லவா?

பாகிஸ்தான் நீங்கிய இந்தியாவின் ஜனத்தொகை கிட்டத்தட்ட 32 கோடி, இதில் தென்னாட்டவர் 12 கோடியாவது இருப்பர். மிச்சமுள்ள 20 கோடிப் பேரே வடநாட்டவர். இந்த 20 கோடிப் பேர் பேசுவதோ இந்தி அல்லாத மொழிகள் 21; இந்தி என்ற பெயரில் உள்ள—ஒன்றைப் படித்தால் மற்றொன்றைத் தெரிந்து கொள்ள முடியாத—11 மொழிகள் ஆகமொத்தம் 32 மொழிகள்! 32 விதமான மொழிகளுக்கு 10 கோடி மக்களைப்

(12-பக்கம் பார்க்க)

ஆரியம் வந்தது---வந்தது கேடு!

[காலஞ் சென்ற தமிழ்ப் பேராசிரியர் கா. சுப்பிரமணியனார் எம். ஏ. எம். எல் அவர்கள் அன்றோர் நாள், கட்டாய இந்திப் பிரச்சினை தமிழகத்தில் அலைமோதிய நேரத்தில், கொதிப் பேறிக் கிடந்த தமிழர்தம் உள்ளத்தைப் பார்த்து "ஏ தமிழ் நெஞ்சமே! கேள்! இந்த இந்திப் பிரச்சினை தனித்த துண்டான சிறு பிரச்சினை அல்ல. பற்பல நூற்றாண்டுகளாக திராவிடத்தை அழிக்க ஆரியம் செய்து வரும் வஞ்சனைச் செயல்கள் எனும் காவியத்தின் இறுதிப் படலம்" என்பதைத் தெள்ளிய தமிழ் நடையில் நன் கெடுத்துக் கூறினார். அந் நாள் அவர் தமிழகத்திற்குத் தந்த அருங் கருத்துகளிற் சில இங்கு உள.]

தமிழர் என்பார் தமிழைத் தாய் மொழியாக உடையவர்கள் ஆவர். தமிழ் நாட்டிற்பிறந்தும் தமிழைத் தாய்மொழியெனக் கருதாதவர் தமிழராகார். தமிழ் நாட்டிற பிறவாதிருந்தும் தமிழைத் தாய்மொழி போற்போற்றுபவரைத் தமிழர் என்பது இழுக்காகாது. தமிழ் நாகரிகத்தை உயர்ந்ததெனக் கருதுபவருந் தமிழரே. "தமிழ் நாட்டிலே தமிழிலேயே இறைவனை வாழ்த்தி வழிபடல் வேண்டும்; தமிழிலேயே சமயச் சடங்குகள் யாவும் நடைபெறல் வேண்டும்; தமிழிலேயே அரசியல் நிகழ்ச்சிகள் எழுதப்பெறல் வேண்டும்; தமிழிலேயே எக் கலைகளையும் கற்பித்தல் வேண்டும்; தமிழிலுள்ள அறிவுக் களஞ்சியங்களைப் பாதுகாத்தல் வேண்டும்; தமிழ்நாட்டில் தமிழ்மொழி ஒன்றே கட்டாய மொழிப் பாடமாக இருத்தல் வேண்டும்" என்ற கொள்கைகளை மேற்கொண்டு ஒழுகுபவரே உண்மைத் தமிழராவர். உண்மைத் தமிழர் ஒருங்கு வீற்றிருந்து தமிழுக்கும் தமிழர்க்கும் ஆக்கம் நாடும் பேரவை **தமிழர் மகாநாடு** எனப் பெயர்பெறும். இத் தமிழ்ப்பேரவையிற் புகுவோர் நினைவில் வைத்தற்குரிய சிலவற்றை இங்கே குறிப்பிடக் கருதுகின்றேன்.

தமிழ்த்தாய்க்குத் தொண்டு செய்வதில் உண்மையாக உழைப்பவர்களுள் சாதி சமயம் பற்றிய பிளவுகள் கருதப்பட மாட்டா. பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், கிறிஸ்தவர், மகமதியர், ஐரோப்பியர் முதலிய யாவரும் தமிழன்னைக்குத் தொண்டு செய்வதில் ஒன்று சேரலாம். பல்வேறு வகையாகப் பிரிந்து நிற்குந் தமிழர் யாவரையும் ஒற்றுமைப் படுத்துதற்குரிய சிறந்த கருவி தமிழ்மொழிப்பற்று ஒன்றேயாகும். தாய்மொழிப் பற்றில்லாத தாய்நாட்டுப் பற்று உயிரில்லாத உடம்புபோல்வதாகும்.

தமிழர் சமத்துவ உணர்ச்சி

தமிழ் அறநூல், "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" எனவும் **தமிழ்ச் சமயநூல்** "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனவும் **பழந் தமிழ்ப்பனுவல்** "யாதும் ஊரே யாவருங் கேளிர்" எனவும் முழங்குங்காலை தமிழ் மக்களைச் சாதியால் வேறு செய்து, சமயத்தால் மாறு செய்து, மொழியினாற் கூறு செய்து அவர்களுக்குள் ஒற்றுமைக் கேடுண்டாக்கியது, யாது?

மரத்தின் அடியில் யாவருங் கலந்து முதல்வனைத் தொழுத தமிழர்பால் வருணம்பற்றிக் கோயில் புகுதல் கூடாது என்ற கோட்பாடு எப்படி நுழைந்தது? தொடக்குங் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனும் பரமற்கு மிடுக்குமிகுந்த உரைகொண்டு நிகழ்த்தும் பூசனை எவ்வாறு உவப்பாயிற்று? நிறைமொழிமாந்தர் மறைமொழி நடுவிற் பிறமொழி மந்திரப் பெருமை புகுந்ததேன்? மலையிலும் கடலிலும் காட்டிலும் நாட்டிலும் பாலைவனத்திலும், பாமர மக்களும் பண்பாய் ஒலித்த யாழும் குழலும் செய்தியறைந்த பறையும் எங்கே போயின? இசைக்குரியது ஏனையர் மொழியெனும் வசைக் கருத்து யாங்ஙனம் வந்தது? **பன்னிரு முறையிலும், நாலாயிரப் பனுவ**லிலும் பயின்ற இன்னிசைப் பண்ணும் திறனும் பரந்து நிலவாமைக்குக் காரணம் யாது? ஓவியக் கலைக்கும், உயரிய சிற்பத்திற்கும் உரிய தமிழ் நூல்கள் எங்கே ஒளித்தன? சித்தர் மருத்துவம்; சிறந்த வாதநூல், வானூல், சிற்பநூல், யோகத் தமிழ் நூல், அறிவர் ஞான நூல் என்பன மாசுபடிந்து மங்கிக் கிடத்தற்கு மந்திரம் செய்தார் யார்? தமிழர்தம் சமய நிலையங்களிலும், அற நிலையங்களிலும் மூட பத்தி தலையெடுப்ப முதன்மையான அறிவைக் கொன்றது யாது? என்பவை போன்ற வினாக்கட்குத் தக்க விடை தேடவேண்டும்.

தமிழர் வீழ்ச்சிக்குக் காரணம்

தேடுமிடத்து கல்லாமையாலும் நூல் காவாமையாலும், கற்றாரைப் பேணாமையாலும் தமிழினத்தார் தாழ் நிலை யடைந்து எதிரிகளின் சொல்லம்பிற்கு இரையாகிப் பொய்ச் சொற்பொழிவென்னும் சரட்டினாற் பிணிக்கப்பட்டு 'மெய்யுடை யொருவன் சொல்ல மாட்டாமையால் பொய்போலும்மே! பொய் போலும்மே!! பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால் மெய் போலும்மே! மெய்போலும்மே!!' என்ற முதுமொழிக்குத் தக்க எடுத்துக் காட்டாக இலங்குதலே தெளிவாகத் தெரியவரும். ஆரியருக்குநாகரிகத்தைக்கொடுத்து அவரது ஆடம்பர மொழிகளைத் தாங்கள் பெற்று அம்மொழியைத் தாமும் அவரும் பொது மொழியாகக் கருதித் தம்முடைய கருத்துக்களை அது வாயிலாக விளக்கவே மொழியுங் கருத்தும் ஆரியருடையனவே என்ற தப்புக்கொள்கை தலையெடுக்கலாயிற்று. இந் நுட்பத்தை ஆய்ந்தறிந்த **டாக்டர் கில்பெர்ட் சிலேட்டர்** (Gilbert Slater) "While the Aryans were dravidised in Culture, the Dravidians were aryanised in language" என்று சுருக்கமாகவும் அழகாகவுங் கூறினார்.

சகம் முழுவதும் பரவிய தமிழ்

'ஞாலம் அளந்தமேன்மைத் தெய்வத்தமிழ்' எனச் **சேக்கிழார்** பெருமான் அருளிய வண்ணமும்; 'சதுர் மறை ஆரியம் வருமுன் சகம் முழுதும் நினதாயின் முதுமொழி நீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமோ' என்று காலஞ் சென்ற **தமிழ்ப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை**யவர்கள் மொழிந்த வண்ணமும் ஒரு காலத்தில் உலகமெங்கும் தமிழ் மொழியானது பரவியிருந்த

போது மதியிற்களங்கம் போல அதன் பகுதி ஒன்றில் ஆரியங் கிளைப்பதாயிற்று. அதை மொழி நூலாராய்வார் நன்கறிவார். அதனை இங்கு விரிப்பின் பெருகும். நம்மளவில் பார்க்கும் பொழுது இந்திய நாடு முழுவதிலும் குமரி முனைக்குத் தெற்கேயும் தமிழானது பதினாயிரம் ஆண்டுகட்கு முன் பரவிச் செழித்தோங்கிற்று. வடமேற்கு இந்தியாவில் ஆரியம் தோன்று முன்பே செந்தமிழ் நாகரிகமும் செம்பொருள் வழிபாடும் நாடெங்கும் சிறப்புற்று விளங்கின. அவற்றின் பழமையைக் குறித்து 51 ஆண்டுகட்கு முன்னேயே காலஞ்சென்ற சென்னைக் கவர்னர் கனம் **கிராண்ட் டப்** (Grant-Duff) ஆய்ந்துரைத்த அமுதமொழி தமிழ் நாடெங்கும் தங்க எழுத்தில் பொறிக்கத் தக்கது.

Their institutions...go pack to a period as compared with which the hoariest Indo-Aryan Antiquity is as the news in Reuters' latest telegram.

பண்டைத் தமிழர் சிறப்பு

இறந்தாரை எழுப்பும் மந்திரம் வல்லராய்த் தண்டமிழர் இலங்கினார் என்பது இருக்குவேதத்தால் குறிக்கப்பட்ட தொன்றாகும். நெருப்புக் கடவுளை வழிபட்ட ஆரியக் குருக்கள் சிலர் முதன் முதல் வட நாட்டில் வாழ்ந்த தமிழ் மன்னன் ஒருவன்பால் உயர்ஞானம் கற்றனர் என்பது **உபநிடத** ஆராய்ச்சியால் புலனாகும். எல்லை கடந்த செல்வச் செருக்கில் திளைத்த தமிழர் அறம்பொருள் இன்பம் வீடு கூறும் மறைநூல் மறந்தனர். அகத்தியர் முதலிய ஐம் முனிவர் உணர்த்திய அருள்நூல்என்னும் **ஆகமம்** இழந்தனர். **ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை**யாம் என்பதுபோல ஆரியர் வேதமும் தந்திரமும் தலை நூல்களாயின. தம் வரலாற்றினை அறவே மறந்த ஆதித்தமிழர் ஆரியர் சூழ்ச்சியால் சொல் வலைக்குள் அகப்பட்டனர். ஆரியச் சொல்லம்பால் தாக்கப்பட்டுத் தாய்மொழி பேசும் நாடுகுறுகப் பெற்றுக், கிளைமொழியாகிய கன்னடம், தெலுங்கு முதலியவற்றை இழந்து, வடவேங்கடம் குமரிக்குள் ஒடுங்கிக், கோயிலிலும் வீதியிலும் வீட்டிலும் ஆற்றிலும் எவ்விடத்தும் ஆரிய மொழிக்கும் அம்மொழித் தலைவருக்கும் அடிமையாயினர். பண்டைத் தமிழ்ப் பனுவல்களும் பாங்கிற் சிறந்த வரலாறுகளும் பதுங்கிக் கிடப்ப, ஆரியக் கலைகளும காவியங்களும் ஆடல்களும் பாடல்களும் யாண்டும் பரவித் தாண்டவமாடலாயின.

"ஹிந்திப்" புரட்டு.

இங்ஙனம் விளைந்த குறைகள் பலப்பல. அவை யாவற்றாலும் ஊனம் பெறாது தனது உண்மையியல்பின் செம்மையினால், பழையவற்றுள் பழையதாயும் புதியவற்றுள் புதியதாயும் மூவாது சாவாது என்றும் உயிர்வாழும் தண்டமிழ் அன்னை இன்னும்உயிரோடுவாழ்ந்து வீற்றிருப்பதைக் கண்டு பொறாமை கொண்ட பகைச் சொல்லினர் ஆரியம் முதலிய மொழிபோற் றமிழ் மொழியையும் இறந்த மொழியாக்குங் கருத்துடன் அவள் மக்களின் அறியாமையைக் கருவியாகக் கொண்டு, அவள் இன்னுயிரைச் செகுத்து விடலாமென்று துணிந்து கொண்டு இற்றைக் காலத்தில் முன் வந்திருக்கின்றனர். **இந்தி** என்னும் குளிர் செந்தீயை அவள் இனிய உடம்பில் சிறிது சிறிதாக நுழைத்து விடலாமென்று கருதுகின்றார்கள். ஹிந்தி வளர இடம் பெறுமாயின், இன்னுஞ் சில ஆண்டுகளில் உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் தமிழ் மணம் அறவே யொழிந்து பள்ளிப் புத்தகம், பத்திரிகை யுலகம், சினிமாக் கதை, சிறந்த நூல்கள், செவ்விய பாடல், அரசியல் நிகழ்ச்சி, ஆலயப் பூசனை, அகத்திற் பேசும் உறவினர் மொழி ஆயவெல்லாம் ஹிந்தி மயமாய்த் தமிழர் நாடும் ஹிந்தி நாடாகவே இந்திய நாடும் நடுவெழுத்தாய உயிரினை இழக்கும். உலக சரித்திரம் ஊனம் எய்தும். தமிழர் நாகரிகமே இந்திய நாகரிக உயிரெனும் நுட்பம் ஒழிந்திடலாகும். தமிழர்க்கு இகழ்ச்சியும் கேடும் இதனினும் வேறேது?

செய்கடன் ஆற்றத் தருணம் இதுவே.

இப்பேரிடையூற்றை நீக்குதற்குத் தமிழ் மக்கள் கண் விழித்துக் கடமையாற்றுஞ் சமயமிதுவே. கடமையை நிறைவேற்றுதற்கு உண்மைத் தமிழர் உடல் பொருள் ஆவி மூன்றும் அர்ப்பணம் செய்வதற்குப் பிற்படலாகாது. மிகுதியால் மிக்கவை செய்வாரைத் தகுதியால் தாக்கித் தலைகுனியச் செய்யாவிடில் தமிழர் என்னும் பெயர்க்குத் தமிழ் நாட்டினர் தகுதியிலர் என்பதே முடியும். தமிழ் நாட்டில் தமிழைக் கட்டாய பாடமாக ஆக்குவதை எதிர்த்தவர்கள் பலர் இப்போது இந்தியை வற்புறுத்தக் கங்கணங்கட்டி நிற்கின்றார்கள். இனி எவ்வகைத் தேர்தல்களிலும் அத்தகையார்க்கு முன்னேற்றங் கிட்டுமாயின் '[illegible]' என்ற சொல் தமிழர்க்கே வாய்ப்புடைத்தாகும்.

நமது குறைபாடு.

தமிழரின் பெருங்குறை யாதெனில், தயவினால் தலைக்கேடு தேடிக் கொளல். அவர்கள், தம் உரிமையைப்போற்றுதலைத் தந்நலந் தேடும் தாழ்வென்று நினைத்துத் தாழ்வடைபவர். வீரமாய் எதனையுந் தொடங்கி விடாமுயற்சி யின்மையால் மோசம் போவார். தம்நூல் பேணாது பிறர்நூல் கற்பவர். உலகம் புகழும் தலை சான்ற கல்வி [illegible]பார் சிலர். அவர் சொற் கேளார் பலர். சுற்றத்துட் குற்றம் காண்பார், இனத்தார் பசித்திருப்ப அயலார்க்கு வயிறார அமுதிடுவர். தமிழ்ச் செல்வர் பலர் எதிரியின் முகமன் வலையில் அகப்பட்டுப் பெருமை பிதற்றி உரிமை இழப்பர்.

இத்தகைய குறைகளை எதிரிகள் நன்கறிவர். அன்னோர் சொல் நலங்காட்டி பொருட் பழம்பறிப்பர்; மாணவராய் நின்று ஆணவராய் ஆட்சி புரிவார். தமிழரைப் பிரித்தாளும் பெற்றியில் இணையற்ற திறமைசான்றவர். எதிர்த்தாற் பதுங்கி அற்றம் பார்த்துத்தம் கருத்தை மெல்லென நுழைத்து இடைவிடா முயற்சியால் நாளடைவில் தமது வெற்றி நாட்டுவர். இந்நுட்பங்களைத் தமிழர்கள் தம்கடமை நிறை வேற்றுமிடத்து மனதில் பதிவித்துக் கொள்ளல் வேண்டும்.

நாம் செய்ய வேண்டுவதென்ன?

இனிச் செய்யற்பாலன சில தொகுத்துரைப்பாம். தமிழன்னையின் பெருமையைத் தமிழ் மக்கள் யாவரும் தெள்ளத் தெளிய உணரும்படி பத்திரிகையும் பிரசாரமும் ஓய்வில்லாமல்நடைபெறவேண்டும். தமிழின் ஏற்றத்தை உண்மையாகக் கருதும் எவரையும் நம்மவராகவே தழுவிக் கொள்ளுதல் வேண்டும், தமிழுக்கு உழைக்கும்

(9-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

17—7—48 சனிக்கிழமை

இந்தி மட்டுமல்ல! சமஸ்கிருதமும் கூட!

"என் கைக்கு அதிகாரம் வந்தால்—நான் சர்வாதிகாரி யானால்—இந்தியர்களை, இந்தியுடன் சமஸ்கிருதத்தையும் கட்டாய பாடமாகப் படிக்கச் செய்வேன். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அத்தனை பேரும் கட்டாயம் சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டும் என்கின்ற நிபந்தனையையும் ஏற்படுத்தி விடுவேன். ஏனெனில் உடனே இராமராஜ்யம் ஏற்பட்டுவிட வேண்டும் என்பது என்னுடைய ஆசை. இராமராஜ்யம் ஏற்பட வேண்டுமானால் எல்லோரும் சமஸ்கிருதம் படித்தே தீர வேண்டும்."

—இதைச் சொன்னவர் இறந்து விட்டார். ஆனால் சொல்லாதவர் இதைச் செய்து முடித்து விட்டார்!

சொன்னவர் இதைச் செய்ய முடியும் என்று கனவுகூட கண்டிருக்க முடியாது. ஆனால் செய்தவர், இவர் இப்படிச் சொன்னதை கட்டாயம் மறந்திருக்க முடியாது.

சொன்னவர் "முப்புரி தரித்த முனிபுங்கவர்" குலத்திலே பிறந்தவர்! ஆனால் செய்தவர் கொங்கு நாட்டிலே பிறந்து வளர்ந்து இன்று ஓர் ஆளவந்தாராக உருமாறி இருக்குமோர் திராவிடர்.

சொன்னவர் சொகுசாக வாழ்ந்த ஓர் இல்லறவாசி, மேடைகள் பலவற்றில் நித்த நித்தம் "வாசாமகோசரமாகப்" பேசிவந்த ஓர் உல்லாசி! பொதுவாழ்க்கையிலே ஈடுபட்டிருந்தாலும் இன்ப வாழ்க்கையை அநுபவிக்க முடிந்த ஓர் சுகவாசி! ஆனால் செய்தவரோ ஓர் வனவாசி அல்ல என்றாலும் உள்ளுந்தோறும் இனிக்கும் வள்ளுவர்தம் குறளில் உள்ள காமத்துப் பால் என்னும் கற்கண்டுக் கட்டியையும் வெறுக்கும் அளவுக்கு பிரமச்சாரி விரதம் பூண்டுவிட்ட ஓர் கோவை வாசி, இராமகிருஷ்ண வித்யாலய மடவாசி இந்நாள், அமைச்சர் பீடத்தை அலங்கரிக்கும் காரணத்தால் ஓர் மவுண்ட்ரோட் சர்க்கார் மாளிகை வாசி!

சொன்னவரே இன்று உயிர்த்தெழுந்து வந்தாலும் செய்ய முடியாத காரியத்தை—செய்யத் துணிய முடியாத காரியத்தை சொல்லாதவர் துணிந்து செய்துவிட்டார், திராவிட இளம் பிள்ளைகளின் உள்ளத்தில் வடமொழித் தீயை மூட்டி விட்டார், தமிழர்தம் கல்வி என்ற பூந்தோட்டத்தில் சமஸ்கிருதம் என்ற நச்சரவத்தை விளையாட விட்டுவிட்டார், மக்கள் மன்றத்தில் கொதிப்புணர்ச்சி வெகு வேகமாகத் தோன்ற வழி செய்து விட்டார், என்றென்றைக்கும் அழியாத பெரும் பழியைத் தம் பெயருடனே தாமே சேர்த்து இணைத்துக்கொண்டுவிட்டார், நம் இனிய தமிழுக்குத் துரோகம் செய்வதற்குத் துளியும் அஞ்சாது முன்வந்து "தயார்" கூறிவிட்டார், தமிழர் தம் வெறுப்பை மிக எளிதில் தேடிக்கொண்டு விட்டார். உண்மையிலேயே ஆரியக் கள்ளியைத் தமிழ்க் கழனியில் கொண்டுவந்து பயிரிடுகிறாரே இவர், இதனால் இவர் பெயருக்கு ஏற்பட்டுள்ள களங்கம், கறை, மாசு, பழி இனி ஒருநாளும் மங்காது, மறையாது. இவர் இனி எத்தகைய பிராயச்சித்தத்திற்கு ஏற்பாடு செய்தாலும் சரி, எவ்வளவுதான் ஆற்றாது அழுது நின்று, "தமிழன்னையே! தெரியாது நின்பால் நான் இழைத்த குற்றத்தை மன்னித்தருள் செய்." என்று எதிர்காலத்தில் பாவ மன்னிப்பு கோரினாலும் சரி, எவ்வளவுதான் உருக்கத்தோடும் வருத்தத்தோடும் பின் ஓர் நாள் இன்று தான் செய்துவிட்ட செய்யக்கூடாத செயலுக்கு வாடி வதங்கி கண்களில் நீர் அருவி பெருக்கினாலும் சரி, செத்த வடமொழியைக் கட்டாய பாடமாய்த் திணித்து செந்தமிழன்னைக்குக் கேடு சூழும் இக் கொடுமையைத் தமிழகம் மறவாது, மன்னிக்காது. "1938ல் ஆரியத் தலைவர் ஒருவர், மாண்டொழிந்த ஆரியத்தை தென்னாட்டுப் பள்ளிகளில் கட்டாய பாடமாகத் திணிக்க எண்ணினார், பலிக்கவில்லை, ஆனால் 1948ல் ஓர் திராவிட அமைச்சர் அந்த "ஆகாத காரியத்தை" செய்து முடித்துவிட்டார்—அந்தோ கொடுமை! கொடுமை!" என்று வருங்காலத்தில் தமிழர் இரத்தக் கண்ணீர் வடிப்பார்களே, அந்தக் கண்ணீருக்கு விடை ஏது? எதிர்காலத்தில் இவர் சிந்தும் கண்ணீர் அந்தக் கண்ணீரைத் துடைக்கும் அளவுக்கு ஆற்றல்

படைத்ததல்லவே! ஆகவே தமிழகம் இவர் செயலை மன்னிப்பது எது? மறப்பதுதான் எப்படி?

நான் சர்வாதிகாரியானால் தென்னாட்டில் சமஸ்கிருதத்தை கட்டாய பாடமாக்குவேன்!—இந்த விபரீத வாக்கியத்தை வீசியவர் காலஞ்சென்ற சத்தியமூர்த்தி **சாஸ்திரியார்**! ஆரியர்! பிரம்ம குலத்துதித்தவர்! பூதேவப் பரம்பரையினர்! வேதவேதாந்தங்கள் எம் உடமை—தகுதியும் திறமையும் எங்கள் தனிச் சொத்து என்று இறுமாந்து கூறும் அந்தச் சிறு கூட்டத்தின் செல்லப் பிள்ளை! அவர் சொன்னார் என்றால் அதிலே வியப்பில்லை, அவர் ஆரியர் ஆகவே சொன்னார், ஒவ்வொரு ஆரியர் உள்ளத்திலேயும் அலைமோதிக்கொண்டிருக்கும் ஆவல் உணர்ச்சியைத்தான் சொன்னார், ஆரியர்கள் பெரிதும் ஆழமான தண்ணீர் மெதுவாக ஓடிக்கொண்டிருப்பதுபோல, தம் உள்ளத்தில் நடமாடும் சூழ்ச்சியின் ஆழத்தை படபடப்பான வார்த்தைகளால் வெளியே கொட்டிவிடமாட்டார்கள், ஆனால் சத்தியமூர்த்தியார் தளும்பிடும் நீர்க்குடமென எதனையும் வெளிப்படுத்திடும் இயல்புடையவர், பொத்தல் இலை போன்றது அவர் உள்ளம், அதற்கு எதனையும் இரகசியமாகப் போற்றி வைக்கத் தெரியாது, ஆகவே அவர் வெளியே சொல்லிவிட்டார். அது இயற்கை. ஆனால் அமைச்சர் அவினாசியார், திராவிடர் மரபிலே வந்த திருவாளர், கட்டாய இந்தியுடன் கட்டாய சமஸ்கிருதத்தையும் திணித்திருக்கிறாரே கல்வித் திட்டத்தில், இந்தப் பகுதிதான் உண்மையில் வியப்பிற்குரியது.

அவினாசியாரின் புதிய கல்வித் திட்டப்படி, ஒரு மாணவன் இந்தி சமஸ்கிருதம் உருது அரேபியன் பெர்சியன் ஆகிய மொழிகளில் ஏதேனும் ஒன்றை கட்டாய பாடமாக எடுத்தே தீரவேண்டும். ஆனால் முஸ்லிம் அல்லாத மற்ற தமிழ் மாணவர்கள் நிறைந்துள்ள இடத்தில் உருது அரேபியன் பெர்சியன் மொழிகள் சொல்லித்தரப்பட மாட்டா. ஏனெனில் **போதிய மாணவர்கள்** இருந்தால் மட்டுமே அவற்றிற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பது அவினாசியார் கட்டளை. முஸ்லிம் அல்லாத திராவிடர்கள் நிறைந்துள்ள இடங்களிலே, இவற்றிற்கு இரண்டொரு மாணவர்களும் முன்வர மாட்டார்கள். ஆகவே நிச்சயம் இவற்றிற்கு வகுப்புகள் இருக்கமாட்டா. ஆனால் பார்ப்பன மாணவர்கள் திரள் திரளாக வடமொழியை கட்டாயம் எடுத்துக் கொள்வார்கள், ஆகவே ஒவ்வொரு பள்ளியிலும் வடமொழி வகுப்புகள் நடைபெறும் என்பது உறுதி. இந்தியைப் பொறுத்தவரையில், மாணவர்கள் போதிய அளவுக்கு வந்தாலும் வராவிட்டாலும் சரி, ஒரு மாணவன்கூட இந்தியை எடுக்காமல் இருந்தாலும் சரி, ஒவ்வொரு பள்ளியிலும் இந்தி ஆசிரியர் இருந்தே தீரவேண்டும் என்று கல்வி அமைச்சர் தாக்கீது பிறப்பித்துவிட்டார். எனவே, இவ்வளவையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, முஸ்லிம் அல்லாத திராவிடர் நிறைந்துள்ள இடங்களில் எல்லாம் இந்தியும் சமஸ்கிருதமும் கட்டாய பாடமாக இருக்கும் என்பதும், இந்த இரண்டில் ஒன்றை தமிழ் மாணவர்கள் எடுத்துக்கொண்டே தீரவேண்டும் என்பதும் திட்டவட்டமாகத் தெரிகின்றது. இப்போதே பல பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள், "எதை எடுத்துக் கொள்கிறாய்—இந்தியா சமஸ்கிருதமா" என்பதாக தம் மாணவர்களைக் கேட்டு விடை பெற்றுவருவதாக நமக்கு ஏராளமான மாணவர்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் கடிதங்கள் எழுதி உள்ளனர்.

காலஞ்சென்ற சத்திய மூர்த்தியார்கூட, கட்டாய இந்தி பள்ளிகளில் வரவேண்டும் என்பதை விரும்பக்கூடிய ஓர் கனவாகத்தான் கருதியிருந்தாரே தவிர நடக்கக்கூடிய நிகழ்ச்சி என்று ஒரு சிறிதும் கருதியிருக்க மாட்டார். கருதி இருக்க மாட்டார் என்பது, **எனக்கு சர்வாதிகாரம் வந்தால்** இந்தியைக் கட்டாய பாடமாக்குவேன் என்று அவர் கூறியதிலிருந்து நன்கு பெறப்படும். அவருக்கு சர்வாதிகாரம் வந்திருக்க முடியாதென்பது உறுதி, வந்திருக்கும் என்று அவரே கூறியிருக்க மாட்டார் அவரைக் கேட்டிருந்தால், வரக்கூடிய நிலைமை ஏற்படக்கூடும் என்று கூட எந்தப் பித்தனும் கூறி இருக்க மாட்டான், ஆகவேதான் அவர், "கட்டாய சமஸ்கிருதம் வரவேண்டும்—வருவதுதான் என் விருப்பம்—ஆனால் வருவதேது—வருவதற்கு வழி எங்கே இருக்கிறது—நான் சர்வாதிகாரியானால் கொண்டுவருவேன்—என்னை எவர் சர்வாதிகாரியாக்குவார்—எனக்கு வர இருந்த பிரதமர் பதவியைக்கூடத்தான் ஆச்சாரியார் தட்டிப் பறித்துக் கொண்டு விட்டாரே" என்று பிரலாபித்திருக்கிறார் இந்த வாசகத்தைக் கூறி.

சத்தியமூர்த்தியார் நடக்கமுடியாத காரியம் என்று எண்ணியதை அமைச்சர் அவினாசியார் செய்தே முடித்துவிட்டார், கட்டாய சமஸ்கிருதத்தை தமிழ் நாட்டுப் பள்ளிகளில் நுழைத்தே தீர்த்துவிட்டார். கட்டாய இந்தியை மட்டுமல்ல,

கட்டாய சமஸ்கிருதத்தையும் இன்று ஒவ்வொரு தமிழ் நாட்டுப் பள்ளியிலும் நுழைத்து விட்டார் அவினாசியார். ஒவ்வொரு தமிழ்ச் சிறுவனையும் நோக்கி, "உன் தமிழன்னையை, நீ, எதனால் மாய்க்க விரும்புகிறாய், பிச்சுவாவாலா, துப்பாக்கி வேட்டாலா" என்று (உனக்கு வேண்டியது இந்தியா சமஸ்கிருதமா என்ற) கேட்கப்படுகிறது. இந்தி சமஸ்கிருதம் இரண்டும் ஒரே காலத்தில் தமிழ் மாணவன்மீது படை யெடுத்துவிட்டன, இடுக்கித் தாக்குதல் என்ற போர்முறைப்படி! இப்பக்கம் திரும்பினால் இந்தி! அப்பக்கம் திரும்பினால் சமஸ்கிருதம்! இரண்டில் ஒன்றை எடுத்தே தீரவேண்டும்! இருதலைக்கொள்ளி எறும்புபோல் தவித்து, நெஞ்சம் வெதும்பி, அதோ, ஒவ்வொரு தமிழ் மாணவனும் இரத்தக் கண்ணீர் வடிப்பதைப் பாருங்கள், எங்களுக்கு இந்த இக்கட்டான நிலையிலிருந்து மீட்சி இல்லையா இல்லையா என்று அவர்கள் துடிதுடித்து அழுவதைப் பாருங்கள், "நாங்கள் தமிழன்னையை மாய்ப்பதாமே! அந்தோ இது கொடிது கொடிது;" என்று சொல்லிச் சொல்லி அவர்கள் புலம்புவதைப் பாருங்கள், இந்தி அல்லது சமஸ்கிருதம்—வாள் அல்லது துப்பாக்கி இரண்டிலொன்றை ஏந்தி தமிழுக்குத் துரோகம் செய்தே தீரவேண்டுமாமே! வற்புறுத்துகிறார்களே எங்களை! சர்க்கார் கட்டளையாமே இது! அவினாசியார் ஆணையாமே! ஐயகோ என் செய்வோம் யாம்" என்று அவர்கள் இடும் அவலக் குரலைக் கேளுங்கள், தமிழர்களே, அவர்கள் சிந்தும் கண்ணீரைத் துடைக்க வாருங்கள். நீங்கள் வாரீராயின், அதுவும் விரைந்தோடி வாரீராயின், அவர்கள் துயர் போக்க வாரீராயின், அவர்களே தங்கள் கல்வியையும் உதறி யெறிந்துவிட்டு போர்க்கோலம் பூண்டு, படைதிரண்டு நின்று, களம் புகுந்து சமர்தொடுக்க வஞ்சினம் கூறிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்துத் தாய்மாரே தந்தைமாரே, உங்கள் பிள்ளைகளை அந்நிலைக்கு நீங்களே துரத்தப் போகிறீர்களா, அல்லது அவர்கள் முந்தி வருமுன்னே நீங்கள் முந்தி வந்து இந்தி சமஸ்கிருத படையெடுப்பினின்று உங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றப் போகிறீர்களா? தமிழர்களே! என்ன செய்யப் போகிறீர்கள்? விடை சொல்லுங்கள். சீக்கிரம் சொல்லுங்கள். உரக்கச் சொல்லுங்கள். அவினாசியாருக்கும் புரியும் மொழியில், சொல்லுங்கள். அவசரம்! அவசரம்! மிக மிக அவசரம்! எங்கே உங்கள் விடை! என்ன உங்கள் விடை?

தமிழர் இல்லந்தோறும் இருக்கவேண்டிய புத்தகம்! ★ இந்தி எதிர்ப்பாளர் கரத்திலெல்லாம் தவழவேண்டிய நூல்!

தமிழன் தொடுத்த போர்!

அல்லது

இந்தி எதிர்ப்பு இயக்க வரலாறு

மா. இளஞ்செழியன் B. A. (HONS)
தீட்டியது!

கட்டாய இந்தி வருவது கேட்டு தமிழகம் போர்க்கோலம் பூண்டுவிட்டது இந்நாள்! இதே போல் அன்றோர் நாள் தமிழ்நாடு கொந்தளித்தது. அந்தக் கொந்தளிப்பின் முழு வரலாறு இது!

பெரியாரின் கருத்து:

"இந்தப் புத்தகம், இதைப் படித்துப் பார்க்கிறவர்களுக்கு, இந்தி எதிர்ப்புப் போரைப் போல உடனே ஒரு போராட்டம் ஏற்படாதா, நமக்கும் அதில் ஒரு பங்கு கிடைக்காதா என்கின்ற ஒரு ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் உண்டுபண்ணத் தக்கதாக இருக்கிறது.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால், இப்புத்தகத்தைக் கொஞ்சம் பார்த்த அளவிற்கே, எனக்கே, இந்தி எதிர்ப்புப் போன்றதான—ஏன்—அதைவிட முக்கியமான காரியங்களுக்கும் போராட வேண்டியது இன்றியமையாததாகக் காணப்படும் இக் காலத்தில் நாம் ஏன் சும்மா இருக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படுகிறது.

இப் புத்தகம், நடந்தவைகளைத் தொகுத்திருக்கிறது என்பது மட்டுமல்லாமல், இனி யாராவது எதுபற்றியேனும் ஒரு போராட்டம் துவக்க வேண்டுமென்று கருதுபவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் இருக்கிறது. மற்றும் இப்புத்தகத்திலிருந்து இப் போரின் தலைவர்களையும் தளபதிகளையும் வீரர்களையும் வீராங்கனைகளையும் தெரிந்துகொள்ளவும், அவர்களைப் பாராட்டவும், அவர்களுக்கு ஏற்பட்டது போன்ற வாய்ப்பை எதிர்பார்க்கவும் திராவிட இளைஞர்களுக்கு ஒரு துடிதுடிப்பு ஏற்படும்.

இப் புத்தகம் ஒவ்வொரு தமிழ் இளைஞர் கையிலும் இருக்க வேண்டுமென்பது என் ஆசை"

240 பக்கங்கள்! குறைந்த விலை!

விலை ரூ. 1 12 0 தபாலில் ரூ. 2 0 0

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு :: சென்னை 1.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிஞர்க்கு நேரும் இன்னல்களை முற்பட்டு அகற்றல் வேண்டும். தமிழுக்கு நேராகவோ மறைவாகவோ ஊறுசெய்யும் பத்திரிகைகளை ஆதரியா தொழிக்க வேண்டும். போதுமான மொழிப்பற்று இல்லாத தமிழ்ச் செல்வர்களின் ஆதரவைக்கொண்டு பகைப் பத்திரிகைகள் பெருமிதமுற்று பெருநடை நடந்து பெருந்தீங்கு விளைக்கின்றன, அவர்கள் சூழ்ச்சியினின்று நம்மை **விடுதலை** செய்யும் வீரப் பத்திரிகைகளை வேரூன்றச் செய்தல் வேண்டும்.

சிறந்த தமிழ் நூல்களுக்குத் தமிழ் மாண்பு விளக்கும் ஆராய்ச்சி முறையில் உரைகண்டு வெளிப்படுத்துவதற்குப் பெருந்துணை புரிதல் வேண்டும். தமிழ் நாகரிகத்திற்குக் கண்ணுடியாய் அமைந்த தொல்காப்பியத்திற்கு ஏற்பட்டிருக்கும் உரைகள் அது தோன்றிச் சில்லாயிரம் ஆண்டுகள் கழிந்த பின் வடநூல் ஒளியினில் வகுக்கப் பட்டனவாகும். உரைக்கேற்ப நூற்பாக்கள் புகுத்தப்பட்டும் திருத்தப் பட்டும் வைப்பு முறை மாற்றப்பட்டும் இருப்பதை ஆராய்ச்சியாளர் அறிவர். அவ்வுரைகொண்டு நூல் கற்பவர் கலப்பற்ற உண்மையைக் காண இயலாதவரே யாவர். அவ்வாறே **திருவள்ளுவர்** நூலுக்கும் தமிழ் நலங்காட்டும் புத்துரை இனியே அமையவேண்டும், **பரிமேலழகர் உரையில்** கொள்ளத்தக்கன பல உள. எனினும் அதன் நிறம் தமிழ் நிறமன்று. வள்ளுவர் கூறிய பொது அறத்தை ஒரு குலத்துக்கொருநீதி கூறும் **மனு** முதலிய நூல்களிற் காண்கவென்று அது கற்பிக்கின்றது. பெண் கல்வி வேண்டாமென்று பேசுகின்றது. அரசியற் கொள்கைக்கு ஆரிய நூல்ல் ஆதாரம் தேடுகின்றது. ாமத்துப் பாலும் வடவர் வழித் தென்கின்றது. அதனல் தமிழரது ண்டைப் பொது நெறி மறைற்று வருணக் கொள்கை மதிப்றுவதாயிற்று. **சங்க நூல்**களுக்கும் தமிழர் மனப்பான்மையைத் தள்ளிதின் உரைக்கும் தெளிரைகள் ஏற்படல் வேண்டும்.

புது நூல்கள் தோன்ற வேண்டும்

ண்டமிழ்க் காப்பிய நலங்களைக் னுற விளக்கும் நற்றமிழ் வாசக நூல்கள் நவநவமாக நனி பரவுதல் வேண்டும். புராணப் பனுவல்கள் ஆராய்ச்சியில் புடைக்கப்படுதல் வேண்டும். மெய் யாராய்ச்சியில் நிலைபெறுவனவே தழுவத் தக்கன. ஏனைய தள்ளத்தக்கன. சரித்திரம் செம்மை பெறுதல் வேண்டும் தமிழின் விழுமிய கருத்தும் நூலும் ஆங்கில முதலிய பிறமொழியாவினும் பிறங்குதல் வேண்டும். சித்தர் நூலாராய்ச்சி செவ்விதிற் நிகழ்ந்து மருத்துவ சோதிட மந்திர யோகநூல் முறைகளைத் தெற்றென விளக்கும் தெளிவு நூல்கள் பலப்பல ஆதல் வேண்டும். மேனாட்டு அறிவியல் நூல்கள் பலவும் தமிழில் பாங்குற அமைத்தல் ஆங்கிலங் கற்றவர் முதற்கடமையாகும். நயமிக்க வடநூல் பிற நூல்கள் தமிழிற் கொணர்தல் அவ்வம் மொழியில் வல்லுநர் கடமை. செந்தமிழிசைகளே தமிழ் நன்மக்களால் போற்றத்தக்கன. இசை வல்ல தமிழர் இன்றமிழ்ப் பாட்டே பாடுதல் வேண்டும். இசைத் தமிழ் முழக்கம் தமிழ் மக்கள் யாவர் வீட்டிலும் நிறைதல் வேண்டும். நாடகக் கலைகள் தமிழர் சீரை நாடுதல் வேண்டும். பண்டைத் தமிழர்கள் வாழ்க்கைச் சிறப்பும் ஆடல் பாடல் சொல் வனப்பும் இன்பம் வீரம் முதல் எண்வகைச் சுவையும் நாடக மேடையிலும், பேசும் படச்சாலைகளிலும் பொங்கித் ததும்பிப் பூரணமாதல்வேண்டும். ஓவியமும் சிற்பமும் ஒண்டமிழ் முறையில் அமைதல் வேண்டும், அவற்றை விளக்கும் நூல்கள் தமிழின் கண்ணே மிகுதல் வேண்டும். தமிழ்கல்லாத தமிழரும் தமிழ் நூலில்லா வீடும் தமிழகத்திருத்தல் கூடாது. சுருங்கக் கூறின் **தமிழ் தமிழ்** என்ற முழக்கம் நாடெங்கும் செழித்தல் வேண்டும்.

மொழிப்பற்றில்லாதார் அதிகாரிகளாதல் கூடாது

தமிழ்மொழி பேணுத் தகுதியில்லார்க்கு அரசியல் அதிகாரம் கிட்டுதலாகாது. பல்கலைக் கழகங்களிலும் அவர்களுக்கு ஆதிக்கம் இருத்தல் கூடாது, எவ்வகைப் பொது நிலையங்களிலும் அவர்களுக்கு மதிப்பு ஏற்படுதல் கூடாது. இது பாமரர் மனத்திலும் பண்டிதர் உள்ளத்திலும் பசுமரத்தாணி போற் பதிதல் வேண்டும். தாய் மொழிப்பகைவர்க்குஉரிமைச்சிட்டு உதவி உயர்வு கொடுத்தல் தமிழன்னைக்குச் செய்யும் நன்றியில் பெருங் கேடாகும். தமிழ் நலம் நாடும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்க்கே மதிப்பும் மாண்பும் அரசியலாற்றலும் கல்லூரித் தலைமையும் திண்ணமாக அமைதல் வேண்டும். தமிழ்ப் பொது மக்கள் கண்ணுங் கருத்துமாகத் தமிழ்த் தொண்டர்க்கே எவ்வகை உரிமைச் சீட்டையும் உதவுதல் வேண்டும். அங்ஙனம் உதவத் தவறுதல் மன்னிக்காத பெருங் குற்றமாகும். இக் கருத்தினைத் தமிழர் என்பார் யாவருள்ளத்தும் நிலைபெற்றுப் பயனுறச் செய்தல் தமிழர் தலைவர்களின் தலைக்கடமையாகும்.

தமிழ்ப் பெரியார்கள் திருநாள்

தமிழுக்குழைத்து உயிலர் அளித்த தமிழ்ப் பெரியார் திருநாள் எங்கும் கொண்டாடப்படுதல் வேண்டும். தமிழர் வீடுதோறும் தமிழ்ப் பெரியார் திருவுருவப்படங்கள் திகழ்தல் வேண்டும். அவர் திருநாள் கொண்டாடாது பிறநாட்டுத் தலைவர் திருநாள் மாத்திரமே கொண்டாடுதல் தமிழரின் உணர்ச்சியின்மையைக் காட்டும் இழிசெயலாகும். எந்நாட்டுப் பெரியாரினும் நம்நாட்டுப் பெரியார் கழிபெருஞ் சிறப்புடையாரென்பதைக் கருதுதல் வேண்டும்.

உலக முழுவதும் ஒரு குடைக்கிழாண்ட உயர் தமிழ் மொழிக்கே இந்திய நாடு முற்றிலும் உரியது. கேற்று தோன்றிய வரம்பிலா மொழிகள் தமிழ்க்கு முன்னால் தலையெடுக்காமல் அடங்கிச் செல்லப் பணித்தல் வேண்டும். அன்னையை மீறும் அகந்தை மொழிகளை அகற்றி ஒழித்தலே அறிஞர் கடமை. போலிப்பற்றை ஒழித்து, நடுநிலை நின்று, பொது நலம் நாடின், இந்தி மொழியினும் எங்கும் பரவிய ஆங்கில மொழியே பொது மொழியாக அமைதற்பாலது, என்பதை எவரும் ஒப்புவர். ஆயிரத்திலொரு தமிழன் வடநாடு சென்ருல் செல்லுங்கால வேண்டுமாயின் இந்தி கற்க. அதற்காகத் தாய்க் கொலை செய்தல் சால் புடைத்தன்று. இந்தியைக் கட்டாய பாடமாக்குதல் சிறிதும் பொருந்துவதன்று.

ஹிந்தி படித்தால்

வடநாட்டில் வேலையா? ஒருபோதுமில்லை!

[“ தமிழ் நாட்டவர் இந்தி படித்தால் அவர்கட்கு வட நாட்டில் வேலை கிடைக்கும் ”—கட்டாய இந்தி ஏன் என்று கேட்பதற்குக் கூறப்படும் ஓர் நொண்டிச் சமாதானம் இது. இன்று மட்டுமல்ல, ஆச்சாரியார் ஆளவந்தாராக இருந்த காலத்திலும் இந்தி பக்தர்கள் இந்த முடக்குவாதத்தைக் கையாண்ட துண்டு. அன்று சர். எம். கிருஷ்ணன் நாயர், காஞ்சிபுரத்தில் நடை பெற்ற மாகாண இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டில், இந்த வாதத்திற்குத் தக்கதோர் மருந்தளித்திருக்கிறார். இன்று மீண்டும் மாகாண இந்தி எதிர்ப்பாளர் மாநாடு நடைபெறவேண்டிய நிலையை உண்டு பண்ணி விட்ட ஓமந்தூரார் சர்க்கார், சர் கிருஷ்ணன் நாயரின் அறிவுரையைக் கேட்டு தம் விழியிலுள்ள பழுதினை நீக்கிக் கொண்டு தெளிந்த பார்வை பெறட்டும்......அந்தப் பழைய முடக்குவாதத்தை இவர்களும் கையாளாமல் இருக்கட்டும் என்பதற்காக அவருடைய அன்றைய பேருரையின் சில பகுதிகள் இங்குத் தரப்பட்டுள்ளன]

நம் குழந்தைகள் பள்ளிக்கூடங்களிலே, இங்லீஷ், கணக்கு, சரித்திரம், பூகோளம், தாய் மொழி ஆகியவைகளை இலக்கண சுத்தமாய்க்கற்குகவேண்டி இருக்கிறது. இவ்வளவு விஷயங்களுடன் ஹிந்தியையும் சேர்த்து அக் குழந்தைகள் படிக்கவேண்டுமெனக் கட்டாயப் படுத்துவது, கொடுமையாகும்.

இந்தக் கொடுமை காரணமாக, கண்டிப்பாய் நம் குழந்தைகளின் பள்ளி வாழ்க்கை ஒருசுமைபோலாவதுடன், அவர்களின் அறிவு வளர்ச்சியும் மழுங்கிவிடும்.

முதல் மூன்று பாரங்களிலே கட்டாயப்படுத்திப் புகுத்தப்படும் ஹிந்தி பாஷையை சீக்கிரத்திலே குழந்தைகள் மறந்தேவிடும்.

ஆணாயினும், பெண்ணாயினும், 15-வது வயது பூர்த்தியானபிறகே, எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்குப் போக அனுமதிக்கப்படுவர். ஆகவே, ஆறுவது பாரத்தில் படிக்கும பிள்ளைகள் சராசரி 15–வயது கொண்டவர்களாகவே இருப்பர். ஆதலால் முதல், இரண்டு, மூன்றுவது பாரங்களிலே படிக்கும்பிள்ளைகளுக்கு முறையே, 10, 11, 12 வயதுதான் இருக்கும்.

தாய் மொழியையும் மேலே குறிப்பிட்டுள்ள, வயதுள்ள மக்களுக்குக் கட்டாயத்தின் பேரில் கற்றுக்கொடுத்த பிறகு, அவர்களின் பெற்றோர் ஏழை தொழிலாளிகளாக இருப்பின் இக்குழந்தைகள் பெற்றோரின் உதவிக்காக, பணம் சம்பாதிக்க ஏதேனும் வேலை செய்ய வேண்டி நேரிடுகிறது.

அத்தகைய பிள்ளைகளைக் கவனிப்போருக்கு அவர்கள் பள்ளிக்கூடத்தைவிட்டு விலகியதும், படிப்பு வாசனை அற்றுப்போவது நன்கு தெரியும்.

தாங்களே பேசும் மொழி, வீட்டு மொழி, எங்கும்பேசப்படும் மொழியாகிய தம் தாய் மொழிக்கே இக்கதி என்றால் முதல் மூன்று பாரங்களில்நிர்ப்பந்தத்தின்பேரில் திணிக்கப்படும் ஹிந்தியை—வீட்டிலோ வெளியிலோ சாதாரணமாகப் பேசப்படாத ஹிந்தியை, சடுதியிலே மறந்தே விடுவார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

தென்னாட்டிலுள்ள படித்த வேலையில்லா வாலிபர்கள், வடநாடு சென்று வேலைபெற ஹிந்தி உதவும்எனக்கூறப்படுகிறது. முன்னே கூறியுள்ளபடி பள்ளிக்கூடங்களிலே இளம்பிராயத்திலே நிர்ப்பந்தமாகப் புகுத்தப்பட்ட ஹிந்தி மொழியை, தென்னாட்டு வாலிபர்கள், வேலையைத் தேடிக்கொண்டு வடநாடு செல்லும் பிராயம் வந்ததும், மறந்தே விட்டிருப்பார்கள்.

ஹிந்தியை அவர்கள் மறந்துவிடவில்லை என்று வைத்துக்கொண்டாலும், வடநாட்டிலே இந்த படித்த பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்குமென்ற நிச்சயமுமில்லை. ஹிந்தி

தெரிந்திருந்தால் தென்னாட்
பி. ஏ’க்களுக்கு வடநாட்டில் வே
கிடைக்கும் என்ற இந்த கூற்
சுத்த அபத்தமென்பது, 1937-
ஆண்டு, மே மாதம் 31-ந் தே
லண்டன் கிழக்கிந்திய சங்கத்தி
லார்டு லோதியன் தலைமையி
கூடிய கூட்டத்திலே, சர். டேஜ் ப
தூர் சாப்ரு அவர்கள் வாசித்த
இந்தியாவிலே கல்வியும் வேலையி
லாத் திண்டாட்டமும்” என்ற பி
சங்கத்தைப் பார்ப்போர் நன்
உணர்வர்.

ஐக்கிய மாகாண சக்கார
“ கல்வியும் வேலையில்லாத் தி
டாட்டமும்” என்ற விஷயமா
விசாரணை நடத்துவதற்காக நியமி
கப்பட்ட கமிட்டியில் தாமே த
வராக இருந்ததாகவும், நீண்ட சு
றுப்பிரயாணம் செய்து, உத்தியோ
கஸ்தர்கள், மற்றைய பிரமுகர்க
ஆங்கிலேயர், இந்தியர், வர்த்தக
கள், கலாசாலை ஆசிரியர்கள் ம
றும் பல துறைகளிலுமுள்ளவ
களை விசாரித்து ஏராளமானசாட்
யங்களைச் சேகரித்ததாகவும், அ
பிரசங்கத்திலே, சர். டேஜ் பகு
சாப்ரு குறிப்பிடுகிறார்.

அப்படி விசாரணை நடத்தி
போது ஐக்கிய மண்டல போலீ
இன்ஸ்பெக்டர் ஜெனரல், தி
ஹாலின்ஸ் (Mr Hollins) என்ப
ரும் சாட்சி கூறினாராம். அவரை
பற்றி சர். டேஜ் பகதூர் சாப்
புகழ்ச்சியாகவே கூறுகிறார். தி
ஹாலின்ஸ், விசாரணைக் கமி
முன் சாட்சியங் கொடுபபதற்கு
சிலவாரங்களுக்கு முன்பு பல பி.
பட்டதாரிகளை போலீஸ் கான்ஸ்
பில் உத்தியோகத்திற்கு நியமி
தாகக் கூறினாரென சர் டேஜ் ப
தூர் சாப்ரு தமது லண்டன் பிரச
கத்தில் கூறியுள்ளார்.

ஐக்கியமாகாணத்திலே, போலீ
காரருக்கு, 13 லிருந்து 15 ரூ வ
சம்பளம். சிலசில இடங்க
ஒரு ரூபாய் இரண்டுரூபாய்
வன்சு கிடைக்கும். வேறு
தொழிலும் கிடைக்காததால், பி.
பட்டதாரிகள், கான்பூர் முதல
இடங்களிலே, தெருக்களில் ப
விற்பதாக, மற்றொரு சர்க்
உத்தியோகஸ்தர், சாப்ரு கமி
யாரிடம் கூறியுள்ளார். சர்க்
ருக்கு சாப்ரு சமர்ப்பித்த அறிக்
யில் இவைகளைப்பற்றி குறிப்
டுள்ளதாகவும் சொல்கிறார், ஹி
யையே தாய்மொழியாகக் கொ

ஐக்கிய மாகாணத்து பட்டதாரிகளான வாலிபகளுக்கு, இவ்வளவு குறைந்த சம்பளத்தில் தங்கள் சொந்த பிரதேசத்தில் வேலை கிடைப்பதே திண்டாட்டமாக இருக்கிறதென்றால், தென்னாட்டு பட்டதாரிகளான வாலிபர்கள், ஹிந்தி கற்றுக் கொள்வதால் மட்டும், வடநாட்டிலே வேலை தேடிக்கொள்ள முடியும் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறதா? திராவிட வாலிபர் நிலை மோசமாகத் தான் இருக்கிறது. ஆனால், வட நாட்டிலுள்ள ஹிந்தி பயின்ற பட்டதாரிகளின் நிலைமையோவென்றால், படுமோசமாகவே இருக்கிறது.

ஹிந்தியில் பொது ஞானமுண்டா?

இந்தியாவிற்கு ஒருபொதுபாஷை வேண்டுமானால், இங்கிலீஷ் தயாரில் இருக்கிறது. சுமார் 75 வருஷங்களாக, படித்த இந்திய உலகிற்கு இங்கிலீஷே பொது பாஷையாக இருந்து வந்திருக்கிறது; வருகிறது. 1885-ம் ஆண்டு பம்பாயிலே, பல மாகாண பிரமுகர்கள் கூடி அகில இந்திய தேசிய காங்கரசைத் துவக்கியதற்குக் காரணம், ஆங்கிலபாஷா ஞானமேயாகும்.

அடுத்தடுத்துக் காங்கரஸ் பல இடங்களில் கூடினதற்கும் சமுதாய, தொழிலாராய்ச்சி சம்பந்தமான, பற்பல மாநாடுகள், பல சமயங்களில் இந்தியாவிலே பல முக்கியமான இடங்களிலே நடைபெற்றதற்கும் ஆங்கில பாஷா ஞானமேதான் காரணம். காங்கரஸ் அரசாட்சி செலுத்தும் பல மாகாணங்களிலும், சட்டசபைகளில், நடவடிக்கைகள் தாய்மொழியில் நடைபெறவில்லை. ஆங்கில பாஷையில்தான் நடைபெறுகிறது.

பல்வேறு காரணங்களால், இங்கிலீஸ் பாஷை, நம் நாட்டிலே, மதிக்கப்படும் விருந்தாளியாக வந்தாகிவிட்டது. அது நிரந்தரமாக நிலைத்து நிற்கும் தகைமைத்தது. வளர்ச்சியும் கவர்ச்சியும் நிரம்பிய மொழி. எவ்வளவு நுட்பமான, புலப்படுத்துவதற்கரிய எண்ணங்களாயினும், அந்த பாஷையிலே அழகு பெற விளக்கமுடியும். விஞ்ஞானம் போன்ற விலைமதிக்கொணா விதவிதமான பல மணிகள் ஜொலிக்கும் பாஷை அது.

ஷேக்ஸ்பியர், மில்டன் போன்ற கவிதா சிரேஷ்டர்கள் பாடிய பாஷை—பாரடே போன்ற விஞ்ஞானிகளின் போதனைக்கு உகந்ததான இங்லீஸ்பாஷை மதிப்புற்குரியதே யன்றோ? மேனாட்டு கொள்கைகள் எண்ணங்களுடன் நம்நாடுதொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமானால் ஆங்கில பாஷா ஞானம் அத்யாவசியமாகிறது. (வேறு பிரன்சு போன்ற ஐரோப்பிய மொழியேனும் தேவையாக இருக்கும்) நாகரிக உலகிலே பெரும் பகுதியிலே உலவிவருவது ஆங்கிலம்.

வியாபார உலகில் உன்னத ஸ்தாபனம் பெற்றிருப்பதும் ஆங்கிலமே. இவற்றுடன், ஆங்கிலம் வேதபாஷையல்ல; மதத்தகராறுகளைக் கிண்டிவிடுவதுமல்ல. இந்தியா பூராவிற்கும் பொது பாஷையாக இப்போது படித்த இந்தியருக்கு, இங்லீஷே பாஷையாக இருக்கிறது.

இங்கிலீஷால் தேசபக்தி போய்விட்டதா?

இங்கிலீஷால் தேசபக்தி போய்விட்டதாகக் கூறுகிறார்கள். தேசபக்தி என்ற தத்துவத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளாமல், “ஆங்கிலம், அன்னிய மொழி, அதை உதறித்தள்ளுவோம்” எனக் கூறி, பொது மக்கள் விருப்பத்திற்கு மாறாக தேசத்தின் ஒரு பாகத்திலே மட்டும் நிலவிவரும் ஹிந்தியை, அகில இந்தியாவிற்கும் பொது மொழியாக்க வேண்டுமெனக் கூறுவதற்குக் காரணம் ஒன்றும் இல்லை.

கிரிக்கட் (Cricket) விளையாட்டை, தேசிய விளையாட்டாகக் கொள்ளலாமா என்ற விஷயத்திலே, சென்னை மந்திரிகளுள் அபிப்பிராய பேதமிருந்தது.

கிரிக்கட், அன்னிய தேசத்தாரின் விளையாட்டு, ஆகவே அதை நாம் வெறுத்து விலக்கவேண்டுமென, சில மந்திரிகள் கருதுகிறார்கள். என் நண்பர், கனம் டாக்டர் சுப்பராயன் தமது சகாக்களுடன் இவ்விஷயமாகப் பலமாக மாறுபடுகிறார். கிரிக்கட் விளையாட்டை இந்திய தேசிய விளையாட்டாகக் கொள்ள வேண்டுமென ஆதரித்துக் கூறுகிறார். டாக்டர் சுப்பராயன் கூறுவதை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். அதைப்போலவே, அன்னிய பாஷைகளாக இருப்பினும், இங்லீஷையே இந்தியாவிற்குப் பொது பாஷையாக்க வேண்டுமென நான் கூறுவதை அவர் சம்மதித்து ஏற்றுக்கொள்வார் என நம்புகிறேன்.

ஆங்கிலம் நமது மதிப்பிற்குரிய விருந்தாளி. தாய்மொழி நமது அன்னையிலும் இனியது. எப்படிப்பட்ட அன்னிய மொழியானாலும் அது எவ்வளவு வளர்ச்சி, கவர்ச்சி வனப்பு பொருந்தியதாக இருப்பினும் அது சாதாரண மக்களின் மொழியாக முடியாது. இம்மாகாணத்தில் பேசப்படும் தமிழினுடையவும் மற்றைய திராவிட மொழிகளினுடையவும் ஸ்தானத்தை, ஆங்கிலமும் பெற முடியாது. தாய்மொழி நம் தாய்மார் நம்மைத் தாலாட்டி வளர்த்த மொழி, சிறு குழவிகளாக நாமிருந்தபோது கொஞ்சிய மொழி. நமது மழலைப் பருவமொழி, சிறுவர்களாக இருந்தபோது, கருத்துக்கள் தெளிவடையாதிருந்தபோது, எண்ணங்களை உருவாக்கி வெளியிட ஏதுவாக இருந்த மொழி. அன்னிய பாஷையிலே எவ்வளவுதான் பாண்டித்தியம் பெற்றிருந்தபோதிலும், பிற்காலத்திலே காதல், அன்பு, கோபம், சோகம் முதலிய மனோபாவங்களைச் சித்தரித்துக் காட்ட உதவும் மொழி. நமது மரணப்படுக்கையிலே, நம் மரண வேதனையைத் தெரிவிக்க உபயோகிக்கும் மொழி. அப்படிப்பட்ட தாய் மொழிக்கீடானது வேறொன்றுமில்லை.

உலகிலுள்ள எல்லா மொழிகளிலும், நமது உயிர்போன்றது, தாய்மொழியொன்றே. அன்னிய மொழியிலே எவ்வளவு வல்லமை பெற்றிருந்தபோதிலும், காலமுழுதும் கீர்த்திப் பிரதாபந்தரக்கூடிய ஒரு கிரந்தம் இயற்றுவதென்றால், அது தன் தாய் மொழியில் எழுதப் பட்டதாகவே இருந்தாகவேண்டும். இச்சமயம் எனக்கு ஆசிரியர் கிப்பன் (Gippon) வாழ்க்கையின் ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது.

கிப்பன், பிரான்சு பாஷையிலே அதிக பாண்டித்யம் பெறறவர். ஆகவே அவர் தமது **“ரோம சாம்ராஜ்யத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்”** என்ற காப்பியத்தை, பிரான்சு பாஷையிலே எழுதவேண்டுமென முதலில் தீர்மானித்தார்.

அதன்படியே முதல் அத்தியாயத்தை பிரான்ச் மொழியில் எழுதி ஒரு நண்பரிடம் காட்டினார்

அதனை ஊன்றிப் படித்துவிட்டு, அந் நண்பர் கூறினர். "இது மிக அருமையானதே. ஆயினும் ஆசிரியர், சரித்திர கிரந்த கர்த்தா என்ற பெயர் என்றென்றும் உலகத்தில் நிலைத்து நிற்க வேண்டுமானல் இந்த காப்பியத்தை அன்னிய பாஷையாகிய பிரஞ்சிலே எழுதுவதில் பயனில்லை. தனது தாய்மொழியாகிய ஆங்கிலத்திலே எழுத வேண்டும்" என்ருராம்.

கிப்பன் இந்த போதனையை ஏற்றுக்கொண்டு அக்காப்பியத்தை 27 ஆண்டுகளில் எழுதி முடித்தார். ஆசிரியர் கிப்பனின் பெயர், ஆங்கில பாஷை உள்ளவும் அழியாது! அவரது புகழ் நிலைத்து நிற்கிறது!

தமிழ் இலக்கியங்கள்

என்றும் அழியாப் பெரும் புகழ் படைத்த, குறள், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்களை, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரேயன்றி வேறு எவரே எழுதுவர்? நமது தாய் மொழிகளாகிய தமிழ் முதலிய திராவிட மொழிகளை, காத்து, வளர்த்து, பரிபாலிப்பது, நமது கடமையாகும். ஆங்கிலத்திலுள்ள கலைகளை, சிறப்பாக விஞ்ஞான நூல்களைத் தமிழிலே மொழிபெயர்த்தல், நமது தாய்மொழி வளர்ச்சிக்கு, ஆக்கமும், வளர்ச்சியும் தேடுதற்கு சாலச்சிறந்ததொரு மார்க்கமாகும்.

இம்மாகாண மொழிக்கு ஆக்கந் தேட, திரவிய சகாயம் முதலிய உதவிகளைச் செய்ய வேண்டியது சென்னை சர்க்காரின் கடமையாகும். வீணுக்கு பணத்தையும் பலத்தையும், ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குதல் போன்ற திட்டங்களுக்காக விரயமாக்காமல், திராவிடமொழி வளர்ச்சிக்காக பண்டிதர்களுக்கு பண உதவிசெய்து, திராவிட மொழி வளர்ச்சிக்கு சென்னை சர்க்கார் உதவி அளித்தால், நாட்டிற்கு நிரந்தரமான நன்மை அளித்தவராவர்.

ஐக்கிய மண்டலத்திலே, முதல் மூன்று பாரங்களிலே, தமிழைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென திட்டம் வகுத்தால், அந்த மாகாணத்து மந்திரிகளும், மக்களும் எப்படி அதை "வரவேற்பார்கள்" என்பதை நாம் சிந்தித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

அப்படி இருந்தும், சென்னை மாகாண மந்திரிகளே, ஹிந்தியை நமது பள்ளிக்கூடங்களில் நமது சிறு பிள்ளைகளுக்கு கட்டாயமாக்கத் துணிந்து நிற்பதைத் காண்கிறோம். இது ஒரு துர் அதிர்ஷ்டவசமான சம்பவமாகும். இதிலிருந்து நாம மீளுவோமாக.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தி—மெஜாரிடி மொழி அல்ல!

பங்கிட்டால் சராசரி அரை கோடி மக்கள் தான் ஒவ்வொரு மொழியையும் பேசுவதாக ஏற்படுகிறது. அப்படியிருக்க ஹிந்திப் பிரசாரகர்கள் ஹிந்தியை 25 கோடி ஜனங்கள் பேசுகிருர்கள் என்று மேடையில் பிரசங்கம் செய்வது எவ்வளவு வடிகட்டின புளுகு என்று பாருங்கள். கொடாப்புளுகனும் கச்சிந்திப் புளுகனும்கூட ஹிந்திப்பிரசாரம் செய்பவர்களுக்கு இணையாக மாட்டார்கள்போலிருக்கிறதே!

நம் தென்னாட்டில் இப்போது கட்டாய பாடமாகத் திணிக்கப்படுவதும், பல ஆண்டுகளாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருவதும் இந்த 11 வித இந்திக மைதிலி என்ற ஒரு சிறு மொ தான். ஆனல் இந்த மைதிலி மட்டும் தெரிந்துகொள்பவர் பங்காரி, போஜ்புரி, கனோஜ், தேஹி, பிரஜ்பாஷா முதலா மற்ற இந்திகளைப் புரிந் கொள்ளமுடியாது. இந்திப் சாரகர்களும் இந்தியை நம் பி ளைகள் மீது திணிக்கும் சர்க் ரும் இந்த உண்மைகளையெ லாம் அடியோடு மறைப்ப விந்தையிலும் விந்தையே.

சுமார் 100-ஆயிரம் ஜனங் கூட பேசாத மைதிலி மொ யாகிய ஹிந்தியை சுமார் ஏ கோடி ஜனங்கள் பேசும் த மொழி வழங்கும் நாட்டில் க டாயக் கல்வியாக நுழைப் எவ்வளவு அநீதம் என்று பா கள். தமிழர்களே! இப்போ தமிழ் மொழியை விட்டுக்கொ பீர்களானல், உங்கள் வாழ் கெட்டது. பிறகு மீட்சியில் எழுங்கள்! கிளர்ச்சி செய் கள்! கட்டாய இந்தி ஒழி வரை கிளர்ச்சியைத் தளரவி தீர்கள்!

சிறந்த நூல்கள்

பெரிய இடத்துப் பெண்	மு. கருணாநிதி	0	8	0
மேடைப் பேச்சு	சி. என். ஏ.	0	2	0
சமதர்மம்	சி. என். ஏ.	0	4	0
தீண்டாமையும் இந்து மதமும்	சி. என். ஏ.	0	4	0
நாடகக்கலையின் முன்னேற்றம்	(ஐவர் கருத்து)	0	6	0
பேசும் பிணம்	இராதாமணாளன்	(அச்சில்)		

வியாபாரிகட்கு தக்க இலாபம் தருவதுடன்; எங்கள் செலவிலேயே அனுப்பப்படும்.

விவரங்கட்கு:— திராவிடன் பதிப்பகம்,
P. B. 18, வேலூர், N. A.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilanchelian B. A. (Hons)